# கவிச்சரம்



## அமரர் பண்டிதர் ம.செ. அலெக்ஸ்சாந்தர்
## நினைவுச்சிறப்பிதழ்

தை
2019
சரம் - 1 பூ - 1



அமரர் பண்டிதர் ம.செ. அலெக்ஸ்சாந்தர்

“குருவின் பாதங்களுக்கு சமர்ப்பணம்”



# இதழாசிரியர் பார்வையில்....

ஈழத்தின் வெளியே எம்மவர் அதிகமாக வாழும் வளமிகு நாடாம் கனடாவில் யாப்பிலக்கண அறிவோடு கூடிய மரபுக் கவிஞர்களைக் கொண்டது கனடா தமிழ்க் கவிஞர் கழகம் எனக்கூறுவதில் பெருமிதமடைகின்றேன். இக்கவிஞர்களை உருவாக்கிய பெருமைக்குரியவர்கள் அமரர் செந்தமிழ்ச் சிற்பி பண்டிதர் ம.செ. அலெக்ஸ்சாந்தர் அவர்களும் கவிநாயகர் கந்தவனமும் ஆவார்.



கனடாத் தமிழ்க் கவிஞர் கழகம் அவ்வப்போது கனடிய மண்ணில் பத்திரிகைகள், மேடைகள், வானொலிகள் மூலம் மரபுக் கவிதைகளை விதைத்து வருவதுடன் மரபுக் கவிமலர்களையும் வெளியிட்டு வருகின்றது. அந்த வரிசையில் வருடந்தோறும் "கவிச்சரம்" என்னும் சஞ்சிகை கனடாத் தமிழ்க் கவிஞர் கழகத்தினால் வெளியிடப்பட்டு வருகின்றது. இவ்வாண்டின் கவிச்சரம் கழகத்தின் அங்கத்தவர்களின் ஆக்கங்களைச் சுமந்து அழகிய பலவர்ண அட்டையுடனும் அமரர் செந்தமிழ்ச் சிற்பி பண்டிதர் ம.செ. அலெக்ஸ்சாந்தர் அவர்களின் நினைவுகளோடு வெளிவந்துள்ளது.

தமிழரின் மரபுவழிவந்த யாப்பிலக்கண அறிவு காலக்கிரமத்தில் அழிந்து போய்விடுமோ என்ற அச்சத்தைப் போக்கி அது மேலைத்தேச நாடுகளிலும் வளர்கின்றது, ஈழத்தமிழரின் புலம்பெயர்வால் உலகெலாம் அன்னைத் தமிழ் அழகுற வளர்ந்து வேற்று இனத்தவரும் எமது மொழியினை ஆசையோடு கற்கும் அளவிற்கு ஆழப்பரந்து பாரதி கண்ட கனவு இன்று நனவாகியுள்ளது என்பதைப் பறைசாற்றுகின்றது.

வருடந்தோறும் பொங்கல் விழாவினில் பற்பல விடயங்களைத்

தாங்கி யாப்பிலக்கண மரபுவழி தளைத்த கவிதைகளைத் தாங்கி வெளிவரும் கவிச்சரம் சற்று முன்னேறி வருடம் இருமுறையோ மூன்றுமுறையோ வெளிவரவேண்டும் என்பது எனது அவாவாகும். கழகத்தின் அங்கத்தவர்களுக்கு கனடிய மண்ணிலே வேரூன்றி வியாபித்துள்ள வர்த்தகப் பிரமுகர்களும் கைகொடுத்துதவினால் கவிச்சரம் ஒன்றிற்கு மேற்பட்ட தடவைகள் வெளிவர உதவியாக இருக்கும் என்பது எனது கருத்தாகும்.

கனடாத் தமிழ் கவிஞர் கழகத்திலே பல்வேறு துறைகளில் புலமை மிக்கவர்கள் அங்கத்தவர்களாக இருப்பது சிறப்பம்சமாகும். பண்டிதர் அலெக்ஸ்சாந்தர் அவர்களின் மறைவின்பின் அவரது சிரேஷ்ட்ட மாணவர் மாவிலிமைந்தன் எம்.ஏ. பட்டம்பெற்ற பட்டதாரி சின்னத்தம்பி சண்முகராஜா அவர்களும் கவிநாயகருடன் இணைந்து கவிதை வகுப்புக்களைத் திறம்பட நடத்தி வருகின்றார். அவரைப்போலவே யாப்பிலக்கணத்தினைப் புகட்டவல்ல வேறும் பல கவிஞர்கள் இக்கழகத்தினில் உள்ளனர் என்று கூறுவதில் அகமகிழ்கின்றேன்.

கனடாவில் எமது கலை, கலாசாரம் ஓங்கவும் எமது தமிழ்மொழி, தமிழ்மரபு நிலைக்கவும் பாடுபடும் சகோதர உணர்வுடன் மிகுந்த அன்பு பாசத்துடன் இணைந்த கனடாக் கவிஞர்களைப் பாராட்டுவதுடன் எமது “கவிச்சரம்” மேலும் அழகோடு பல்வேறு ஆக்கங்களுடன் ஒன்றிற்கு மேலான வெளியீடுகளைக் காணவேண்டும் என்ற எனது ஆசையினைக் கூறிப் பூத்த புத்தாண்டு யாவருக்கும் சகல சௌபாக்கியங்களுடனும் அமைந்த பொன்னாண்டாக மலர வாழ்த்துகின்றேன்.

கவிச்சரம் மலர்க்குழு சார்பில்,

**அருட்கவி தம்பிஐயா ஞானகணேசன்**

# கனடாத் தமிழ்க் கவிஞர் கழகத் தலைவரின் செய்தி



கனடாத் தமிழ்க் கவிஞர் கழகத்தின் வெளியீடான "கவிச்சரம்" என்ற பெயர் கொண்ட அரையாண்டுச் சஞ்சிகையின் இந்த இதழ் எங்களின் ஆசானும் கனடாவில் மரபுக்கவிஞர்கள் தோன்றி வளரக் காரணகர்த்தாவுமாகிய அமரர் பண்டிதர் ம.செ. அலெக்ஸ்சாந்தர் அவர்களின் சிறப்பிதழாக வருவதையிட்டு மனநிறைவு அடைகின்றோம். இந்த இதழ் வெளிவருதற்காக உழைத்த எல்லோருக்கும் எமது நன்றி. இந்த இதழில் தமது படைப்புக்களைத் தந்துதவிய எல்லோருக்கும் கனடாத் தமிழ்க் கவிஞர் கழகத்தின் சார்பில் பாராட்டி மகிழ்கின்றோம். அவர்களுக்கும் எமது நன்றி. எங்களின் முயற்சி வெற்றிகரமாக நிறைவேறுவதற்கு உதவியாகத் தமது நிதியுதவியைத் தந்துதவிய விளம்பரதாரர்களுக்கும் எமது நன்றி.

கனடாத் தமிழ்க் கவிஞர் கழகத்தின் காப்பாளரும், எங்கள் ஆசானுமாகிய நூற்றுக்கு மேற்பட்ட நூல்களைப் படைத்த அறிஞர் கவிநாயகர் வி.கந்தவனம் அவர்களுக்கும், மரபுக்கவிதை வகுப்புக்குளைச் செவ்வனே நடத்தி வருகின்ற கவிஞர் கழகத்தின் முன்னாள் தலைவர் மாவிலி மைந்தன் சண்முகராஜா அவர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம். அவ்வப்போது கவிதை வகுப்புக்களில் கலந்து தமது கருத்துக்களையும், அறிவூட்டலையும் செய்து வந்த அறிஞர்கள் முனைவர் நா.சுப்பிரமணியன், திரு சம்பந்தன், டாக்டர் சிவகடாட்சம் ஆகியோருக்கும் எமது நன்றி. புதிதாக மரபுக்கவிதைகளை கற்போருக்கான வகுப்புக்களை நடத்திய

திருமதி மீரா இராசையா விமலநாதன் அவர்களுக்கும் எமது நன்றி. எல்லாவற்றிற்கும் மேலாக யாப்பிலக்கணத்தை எங்கள் அனைவருக்கும் தனது இறுதி மூச்சுவரை கற்பித்த எங்கள் அன்பிற்கும், மதிப்பிற்குமுரிய அமரர் பண்டிதர் ம.செ. அலெக்ஸ்சாந்தர் அவர்களை இந்த நேரத்தில் நன்றியுடன் நினைத்து அவருக்கு இந்தக் கவிச்சரம் நூலைக் காணிக்கை செய்கின்றோம்.

சங்ககால இலக்கியங்களில் உள்ள பாடல்கள், திருக்குறள், திருமுறைப் பாடல்கள் எல்லாம் யாப்பு இலக்கண விதிகளுக்கமைய செய்யப்பட்டவை. இத்தகைய மரபு ரீதியான பாடல்களைப் போன்று இக்காலத்தில் மரபுக்கவிதைகள் படைக்கப்பட்டு வருகின்றமை மிகவும் மகிழ்ச்சிக்குரிய விடயம் என்பதில் ஐயமில்லை. இவ்வாறான மரபுக்கவிதைகளை மக்கள் வாசகர்களுக்கு எடுத்துச் செல்வதோடு எதிர்காலத்திலும் மரபுக்கவிதைகள் படைக்கப்படுவதற்கு ஊக்கப்படுத்தும் நோக்கோடு இந்தக் கவிச்சரம் என்ற சஞ்சிகையை உங்கள் வாசிப்பிற்குத் தருகின்றோம்.

கனடாத் தமிழ்க் கவிஞர் கழகம் ஆரம்பிக்கப்பட்டு மாவிலி மைந்தன் சண்முகராஜா தலைமையிலும், அடுத்து அருட்கவி ஞானகணேசன் தலைமையிலும் பல முன்னேற்பாடான பணிகளை ஆற்றியிருக்கின்றது. இந்த நேரத்தில் கழகம் தொடங்கப்பட்ட நாளிலிருந்து இன்றுவரை பணியாற்றிய நிர்வாக சபை உறுப்பினர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நாமும் வாழ்வோம். நம்மைச் சூழவுள்ளவர்களும் நன்றாகவே வாழட்டும்.

அன்புடன்,

கழக நிர்வாக சபை உறுப்பினர்கள் சார்பாக

**அகணி சுரேஸ்**

தலைவர், கனடாத் தமிழ்க் கவிஞர் கழகம்

# மனிதநேயம் மிக்க சமூகசேவையாளர் பண்டிதர் அலெக்ஸ்



எஸ்.கே. குமரகுரு

"உற்றநோய் நீக்கி உறாஅமை முற்காக்கும்
பெற்றியார்ப் பேணிக் கொளல்"

(பொருட்பால் 45, பெரியாரைத் துணைக்கோடல் - 445) எனும் வள்ளுவர் குறளுக்கமைய நான் அமரர் பண்டிதர் ம.செ.அலெக்ஸ்சாந்தர் ஐயாவுடன் உறவாடியதை எண்ணிப்பார்க்கின்றேன்.

ரொறன்ரோவில் இடம்பெற்ற சுவாமி விபுலாநந்தர் நினைவு விழாவிலே பண்டிதர் ஐயாவை முதன்முதலாக சந்திக்கும் வாய்ப்பு எனக்குக்கிடைத்தது. தொடர்ந்த நட்பானது வள்ளுவர் கூற்றுக்கமைய "நிறைநீர நீரவர் கேண்மை பிறைமதி" யாக அவர் இறக்கும்வரைத் தொடர்ந்தது.

எழுபதுகளில் மட்டக்களப்பு ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் விரிவுரையாளராக பணியாற்றியதையும், மட்டக்களப்பு மக்களின் விருந்தோம்பும் பண்பையும் சந்திக்கும்போதெல்லாம் சிலாகித்துக் கூறுவார். சுவாமி விபுலாநந்தர் மீது அளவற்ற பற்றுடையவர், சுவாமியின் 125வது பிறந்தநாள் சிறப்பு மலருக்கு ஐயா எழுதிய கட்டுரையே அவர் எழுதிய இறுதிக்கட்டுரை என்பதை பதிவுசெய்ய விரும்புகின்றேன்.

நான் அண்ணாமலை பல்கலைக்கழகம் கனடா வளாகத்தில் தமிழ் முதுமாணி கல்வி கற்றுக்கொண்டிருந்த வேளை யாப்பிலக்கணம் பற்றி மேலும் கற்பதற்காக பண்டிதர் ஐயாவை அணுகியபோது எந்த மறுப்பும் தெரிவிக்காது என் வீடு வந்து கற்பித்த பேராசான். தொடர்ந்து கனடா கவிஞர் கழகம் நடத்தும் மரபுக்கவிதை வகுப்புக்கு அழைத்து யாப்பிலக்கணத்தைப் போதித்து செய்யுள் (பாக்கள்) எழுதுவதற்கு வழிகாட்டியவர். (யாப்பிலக்கணத்தில் செய்யுளை "பா" என வழங்குதல் மரபாகும்).

அமரர் அலெக்ஸ் ஐயா தமிழ் அறிஞர், தமிழ் மொழிப்பற்றாளர், கல்வியாளர், பன்மொழிப் புலமையாளர், மனிதநேயம் மிக்க சமூகச் சேவையாளர். தமது இளகிய இதயம் மூலம் அனைவரிடத்தும் அன்பும் செலுத்தியவர். கருணையும், இரக்க சுபாவமும், உறுதியான செயற்பாடும் கொண்டிருந்த ஐயா அவர்கள் அனைவராலும் மதிக்கப்பட்டவர்.

வட மாகாணத்தில் ஆற்றிய சேவை மூலம் தன்னலமற்ற சேவையாளர் என்பதை நிரூபித்த பெருந்தகை. தமது சமூகத்தவர்கள் தமிழ் அரசியல் கட்சிகளால் புறக்கணிக்கப்படுவதை தடுப்பதற்காக ஆரம்பிக்கப்பட்ட சிறுபான்மைத் தமிழர் விடுதலை முன்னணியின் செயலாளராக பணியாற்றியவர். மேலும், தமது மக்களின் முன்னேற்றத்துக்காக எண்பதுகளில் இலங்கையில் ஆட்சி புரிந்த ஐக்கிய தேசியக்கட்சி அரசாங்கத்தில் பணிப்பாளர் பதவிகளை வகித்து அளப்பரிய சேவையாற்றிய அப்பழுக்கற்ற சேவையாளர்.

இலங்கையில் மட்டுமன்றி கனடாவிலும் தமிழ் மொழியின் வளர்ச்சிக்கு உழைப்பதையே உயிர் மூச்சாகக்கொண்டு செயற்பட்டவர். ரொறன்ரோ மாவட்ட கல்விச் சபை, ரொறன்ரோ மாவட்ட கத்தோலிக்க கல்விச் சபை, பீல் பிராந்திய கல்விச் சபை, கனடா தமிழ் தொழில் நுட்பக் கல்லூரி, கனடாத் தமிழ்க் கவிஞர் கழகம் ஆகியவற்றில் ஆலோசகராகவும், தமிழ் விரிவுரையாளராகவும் பணியாற்றி பட்டதாரிகளையும், மரபுக் கவிஞர்களையும் உருவாக்கிய பெருமைக்குரியவர்.

அமரர் பண்டிதர் ஐயாவின் சிறப்பு மலராக வெளிவரும் எமது கவிச்சரத்துக்கு அவர் பற்றிய சில நினைவுகளைப் பதிவு செய்யக்கிடைத்தமையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன்.

நன்றி.



# கற்பக விருட்சமாம் அமரர் பண்டிதர் ம.செ. அலெக்சாந்தர்



**கவிநாயகர் கந்தவனம்**

பற்றுடன் பாய்ந்தநம் பண்டிதர் அலெக்சாந்தப்
பாலாறு தானாகவே
வற்றித்தான் போனதோ எற்றுக்கிவ் அவசரம்
வானகம் சென்றெய்தவே!

என்னகுற் றங்களைச் செய்தனம் அவைபற்றி
ஏதுமே அறிந்திலோமே
மன்னவ வண்டமிழ் அன்னையும் வாடியே
வதங்குதல் காண்கிலாயோ?

உன்காதல் மெற்றில்டா அம்மையார் தம்மையும்
உண்மையாய் மறந்தாய்கொலோ
மன்னுயிர் பிள்ளைகள் மாசிலாப் பாசமும்
வானத்திற் கிடைக்குமாமோ?

அண்ணலே இலக்கணம் கற்பித்த ஆர்வமும்
அடங்குமோ முடங்குமோதான்
எண்ணிலா மாணவர் மனங்களைக் கவர்ந்தவர்
ஏத்தவே பவனிவந்தாய்!

இணரூழ்த்து வாசனை மலரொப்பக் கற்றதை
உணரவே விரித்துரைத்தாய்

கணமேயும் கார்முகில் போலவே நீபொழியும்
கருத்துக்கள் வரண்டதாமோ?

சித்திரம் கெட்டது செம்மரம் பட்டது
தேரோட்டமும் நின்றது
வித்தகம் வீழ்ந்தது வீறுநடை சாய்ந்தது
மேகமும் கலைந்ததாமோ?

எந்நாளும் வகுப்புக்குத் தன்வாக னத்திலே
ஏற்றியே இறக்கிவந்த
தன்னார்வ மாணவன் பொன்னான அருட்கவி
தன்னையும் மறந்தாய்கொலோ?

யாரைநீ மறந்தாலும் யாமுன்னை மறக்கிலோம்
ஐயாநீ ஓர்கற்பக
பேருயர் விருட்சமாம் பீடுற வானகப்
பெருவாழ்வில் தூங்குவாயே!



# அலெக்சாந்தர் வாழ்வார் கவியாக!



**மாவிலி மைந்தன் சி. சண்முகராஜா**

மறைந்து சென்றது தாய்ப்பறவை - நாம்
மறப்ப துண்டோ அதனுறவை!
நிறைந்த முகமும் நிலவொளியாய் - அதில்
நிலவும் நகையும் நித்திலமாய்
செறிந்த அறிவின் முத்திரையாய் - நம்
சிந்தை யிலுள்ளார் சித்திரமாய்
உறைந்த நினைவுகள் நிழலாடும் - மன
உணர்வும் நிதம்நிதம் கவிபாடும்!

எழுத்தசை சீரடி தொடையாகக் - கவின்
எழில்தரும் அணிகளின் நயமாக
விழுத்துணை யாகிய மரபாக - பெரும்
வியத்தகு இலக்கிய வளமாக
இழுக்கறும் இலக்கணப் பொருளாக - எம்
இதயத்துப் பாடலின் ஒலியாகப்
பழுத்தமுத் தமிழ்க்கனிச் சுவையாக - நம்
பண்டிதர் இருப்பார் நினைவாக!

பூவாய் உதிர்ந்து போனாலும் - அவர்
புன்னகை வாசம் போகாது
பாவாய்ப் பாவின் இனமாக - பண்
பாட்டில் தொடரும் மொழியாக
நாவால் சுவைக்கும் தமிழாக - நம்
நாட்டின் தென்றற் காற்றாக
தேவா மிருதச் சுவையாகத் - அலெக்
சாந்தர் வாழ்வார் கவியாக!

# தூய மனத்தோன்



**கந்த. ஸ்ரீபஞ்சநாதன்**

தூய மனத்தவர் துன்பம் அனுபவித்தோன்
ஆய கலைகளை ஆவலாய்—நேயமாய்
கற்று வெற்றிகொண்டோன் கற்பிக்கும் ஆற்றலால்
மற்றவர் போற்றுவர் மாண்பு

உதவிகள் செய்வதில் உள்ளம் மலர்ந்தோன்
வசதியில்லா தோருக்கு வாய்ப்பைக்—கதவுந்
திறத்து கொடுப்பார் திடமாய் இலஞ்சம்
மறந்தும் பணம்வாங்கா மாண்பு

தெள்ளு தமிழினைத் தேடியே படிப்பிப்பார்
அள்ளி வழங்கி அவர்களை—தெள்ளியர்
ஆக்கியவர் மாணவர் இப்போது யாப்பினை
ஆக்கமாய் கற்பிக்கும் ஆங்கு.

கவிஞர் கழகத்தின் காப்பாளர் ஆன்றோன்
செவியினால் கேட்டறியும் செல்வம்—குவிந்து
கிடைத்திடப் பெற்றோன் களத்திலே நற்சொல்
மடைதிறந்து பேசுவார் மாண்பு

அன்பாலே மற்றவரை ஆட்கொள்ளும் சான்றோன்
உன்னுடைய வாய்ச்சொற்கள் உண்மையாகும்— என்றும்
எமது கவிதையில் எங்கள் மனதில்
தவறாது வாழும் தனித்து.

# சீராளன் இவரன்றோ?



பவானி தர்மகுலசிங்கம்

மண்ணுலக வாழ்வினிலே மகத்துவங்கள் புரிந்தோர்கள்
கண்ணுக்குள் நிறைந்திருப்பார், கடவுளுடன் இணைந்திருப்பார்
எண்ணத்தில் என்றென்றும் ஏற்றமுற வாழ்ந்திருப்பார்
திண்ணியனெம் மாசானும் சிந்தையிலே நிலைபெற்றார்!

அன்றலர்ந்த தாமரையாய் அன்புமுகம் பூத்திருக்கும்!
நன்றெனவே புன்சிரிப்பும் நாணயத்தைக் காட்டிநிற்கும்!
குன்றுடனே குலவுகின்ற அருவியெனக் குணம்காட்டும்!
தென்றலெனத் தீஞ்சுவையாய்த் தேன்தமிழும் நாப்புரளும்!

சீரியநற் செந்தமிழில் செம்மையுடன் நாம்விளங்க
நேரியநற் பாதையிலே நீளுரைகள் தாமுரைத்துக்
காரியங்கள் ஆற்றிடவே கனிவான அறிவுரைகள்
வீரியமாய் விதந்துரைத்த, வித்துவத்தின் விற்பனனே!

அன்புடைமை அறிவுடைமை ஆளுமைசேர் ஆற்றல்கள்
பண்புடைமை பகுத்தறிவு பாங்குடனே கொண்டிலங்கி
வண்மையுடன் பண்டிதனாய் வையகத்தே வலம்வந்து
திண்மையுடன் செயற்பட்ட சீராளன் இவரன்றோ?

ஆசிரியப் பெருந்தகையாய் ஆன்றநற் கல்விமானாய்
மாசிலாது யாப்பதனை மாணவர்க்கு மகிழ்ந்தூட்டிக்
காசினியும் கண்கலங்கிக் கைகூப்பி வழியனுப்பத்
தேசுநிறை யுளத்தோடு தேவனிடம் சேர்ந்தாரே!

# வியாசிரியர் அலெக்ஸ்சாந்தர்



**தேசபாரதி ராஜலிங்கம்**

அன்பும் உண்டு அறனும் உண்டு
அமுதமொழி யார்க்கும்
மன்பும் உண்டு மாண்பும் உண்டு
மகுடமெனத் திகழும்
என்பிற் புகுத்தி இதயத் திருத்தும்
ஏகலாய பொழுதில்
அன்றில் பறவை அழகே யுருவார்
அலெக்ஸ்சாந்தர் தாமே!

இனிமை அணியும் இலக்க ணத்தே
இலங்குதமிழ் போற்றிக்
கனியைக் கன்னற் கரும்பை வார்த்துக்
கலந்தமுத்தம் ஆக்கிப்
பனியின் குளிராய் பவனக் குரலாய்ப்
பளிங்கெனவே உரைப்பார்!
தனிமைக் குளிரும் தாங்கி நடந்தே
தனித்தமிழின் குருவே!

காற்றுக் கடிந்து விறைத்த போதும்
கனித்தமிழைக் கோர்த்தே
ஏற்கும் மரபில் இலக்கை யுரைத்து
இலக்கணங்கள் தருவார்!


போற்றும் தமிழைப் போற்றி அனைவர்
　　புத்தகத்துஞ் சார்ந்தே
நாற்றும் மரபை நன்நூல் பரப்பி
　　நலங்களுரை யிடுவார்!

சிரித்த முகமும் செவ்வி யனைத்தும்
　　சிந்திப்பா ரவர்க்கே
வரித்தே மயக்கும் மரபுத் தமிழை
　　வணங்கிடவே யுரைப்பார்!
நெரித்த புருவம் நிறுத்த மொழிகள்
　　நெருப்பெனவே சொல்லும்
அரித்த உரையும் அழுக்கா றெதுவும்
　　அவர்க்கிலையே அன்றோ!

தமிழின் மரபும் தமிழார் கவியும்
　　தமிழாருஞ் செஞ்சொல்
அமிழ்தின் வகையால் ஆழம் இயம்பி
　　அணிப்பாவுக் கணியாய்
இமிர்தல் இமைப்பு இலக்க ணத்தின்
　　இமைப்பெல்லாம் உருகக்
கமழும் வகையில் கவிஞர் படைத்தார்
　　கனியெனவே அலெக்சே!



# சிந்தையில் மறவா சீர்பெரும் ஆசான்!



அருட்கவி ஞானகணேசன்

ஆல மரம்போல் அன்பால் இறுகியோன்
சாலச் சிறந்த சற்குணன் அலெக்சார்
நாலும் கற்ற நற்றமிழ்ப் பண்டிதன்
சீலனின்; பிறப்புத் தெய்வப் பிறப்பே!

இலக்கண வித்தகன் எண்திசை போற்றிடும்
தலைக்கன மில்லாத் தங்கமாம் ஆசான்!
கலகலப் பில்லாக் கண்ணியன்! கற்றோன்
விலையிட முடியா வித்தகன் எம்குரு!

அன்பின் சிகரம்! ஆழறி வுடையோன்!
என்றும் சிரித்த எழிலாம் வதனன்!
தன்னல மறியாத் தங்க மனத்தினன்;
நண்ணினன் இயேசுதாள் நலமுற வாழ்ந்தே!

இறுதி மூச்சிலும் எம்நிலை உயர்த்திட
உறுதியா யுழைத்த உத்தம புருசர்!
அறமதைப் போதித்த அன்புரு வானவர்
நிறைவுற வாழ்ந்து நீத்தார் புவியே!

சர்வ மதத்தினன்! சாத்விகன் சற்குரு
கர்வ மறிந்திடா கன்னித் தமிழ்மகன்

தற்பெரு மையிலாத் தங்க மனசினன்
பொற்பத மடைந்தனன் போற்றுவோம் நாமே!

எத்தகை அன்பினை எம்மில் வைத்தீர்?
முத்தரே இறுதி மூச்சிலும் புகட்டிய
சித்தரே! காண்பமோ சிரித்த உம்முகம்
கர்த்தரின் தாளதில் காண்பீர் சொர்க்கமே!

அற்புதத் தோற்றலே அன்பான குருவரே
விற்பனம் புகட்டிய வித்துவ ஞானியே!
கொற்றவா உந்தனின் கனிமுகம் என்றும்
நிற்குமே நிலைத்துச் சீடரெம் உளத்திலே!



# தமிழே
# தமிழே தமிழே!



**தேசபாரதி ராஜலிங்கம்**

தமிழே தமிழே தமிழென் மொழியே
குமிழும் உலகுக் குயிலே-அமிழ்தாம்
உயிரும் உடலும் உணர்த்தும் மனிதப்
பயிரே செகத்தின் பயிர்ப்பு!

சங்கம் மருவிச் சரிதம் பலவாய
தங்கப் புவியின் தமிழ்த்தாயே-அங்கமென
பத்தோடு எட்டும் பதினெண் மேற்கணக்கும்
கொத்தோடு பூக்கும் கொடி!

பேச்சு வழக்கிலார் பூட்டும் படிவைத்தும்
வீச்சுக் கலையாத வேகமாய் - மூச்சுத்
தமிழென்று வேற்றுத் தகையாரும் போற்றும்
கமழும் மொழியானாள் கண்!

ஓலைச் சுவடிகளை ஊதும் நெருப்பினிலே
ஆலையாய் எரித்தார் அவுணர்களே - சூலையென
மூசிவரும் தீயினிலே மூட்டித் திருக்குறளை
வீசிடவே காத்தார் விதி!

கல்லில் எழுதிக் கருங்கல்லில் வார்ப்பான
சொல்லில் அரங்கேற்றம் செய்தாயே - நல்லதமிழ்

தேவார வாசகத்தை தேன்சங்கத் துள்ளான
பாவாரப் புத்தகமே பார்!

கலம்பகம் ஆற்றுப்படை கார்மரபு அன்னைத்
தலம்பற்றும் வெண்பாத் தகையே - நிலம்பற்றும்
எண்சீர், எழுசீர் இயலார் விருத்தமெலாம்
மண்ணேர் வகுக்கும் மரபு!

பக்திப் பெருவெள்ளம் பாடல்அம் ஆழ்வாரின்
சொக்கும் தமிழ்த்தாயின் சீராமே - திக்குத்
திருக்குறளும் வாசகமும் திருக்கோவை யாரும்
அருந்தமிழே உன்றன் அடுக்கு!

சங்கம் மருவியதோர் சாலமுங் காலமென
பொங்கும் தமிழ்த்தாயுன் போதகமே - திங்களும்
மும்மாரி காட்டும் முழுநிலத்தில் முத்தமிழின்
அம்மாரி ஆக்கும் அணை!

தமிழே உனக்குத் தமிழ்க்கம்பன் னோடும்
இமையாகிப் பெற்றாய் எழிலே - அமிழ்தாகிச்
செஞ்சொற் பனுவல் சிலப்பதி காரமெலாம்
துஞ்சாது பெற்றாயே சொல்!

வாருலகில் வாய்த்த மணித்தமிழைப் போலாகும்
பேருலகப் பண்ணொன்றும் பேசாதே - தேருமொரு
கற்பார் மொழிப்புனலைக் காதலிடுஞ் செந்தமிழை
நற்பார் மரபென்றார் நாடு!

# தமிழே வாழ்க!
# தமிழரே வாழ்க!



அகணி சுரேஸ்

செம்மொழித் தமிழே வாழ்க!
சீருடன் செழித்து வாழ்க!
எம்மொழித் தாயே வாழ்க!
என்றுமே நிறைவாய் வாழ்க!
மும்மொழி இயலே வாழ்க!
மூன்றுமே பெருகி வாழ்க!
இம்மொழித் தமிழர் வாழ்க!
இன்புடன் மகிழ்வாய் என்றும்

தாய்மொழித் தமிழே வாழ்க!
தனித்துவ மொழியாய் வாழ்க!
தெய்வமும் வாழ்த்த வாழ்க!
தேற்றமாய் ஓங்கி வாழ்க!
வாய்மொழித் தேனாய் வாழ்க!
வளங்களும் பெருகி வாழ்க!
மெய்மொழி பேசி வாழ்க!
மேவிடத் தமிழர் எங்கும்

தேன்மொழித் தமிழே வாழ்க!
தெருவெலாம் ஒலிக்க வாழ்க!
தொன்மொழி அரசி வாழ்க!
எங்களின் அன்னை வாழ்க!

பன்மொழி உலகில் வாழ்க!
பாங்காய் செறிந்து வாழ்க!
அன்புடன் கூடி வாழ்க!
அருமைத் தமிழர் என்றும்.

மரபுத் தமிழே வாழ்க!
மாண்புடன் மதிப்பாய் வாழ்க!
வரமான மொழியே வாழ்க
வாஞ்சையால் நிரம்பி வாழ்க!

உரமான மொழியாய் வாழ்க!
தமிழ்மொழி நூல்கள் வாழ்க!
தரமாக படைத்து வாழ்க!
தம்மொழியில் தமிழர் என்றும்.



# நல்லாரோடு இசைந்திருத்தல் நன்றே!



பவானி தர்மகுலசிங்கம்

நல்லாரைக் காண்பதுவும் நன்றே என்று
நல்வார்த்தை பகர்ந்தளித்தாள் அவ்வை அன்று!
சொல்லாலும் செயலாலும் உயர்ந்தோர் தம்மைத்
துணையாக, நட்பாகக் கொள்ளல் வேண்டும்!
பொல்லாதார் உறவென்றும் புன்மை காண்பீர்!
புகையெழுப்பி அனல்வீசும் காட்டுத் தீயும்
நல்வாசம் வீசுகின்ற சந்தனத் தோப்பை
நலிவடைய வெந்துபடச் செய்தல் போலாம்!

வலியாரை நாடிநின்று வலிந்து நட்பை
வளர்த்தல்தாம் மதியன்று, சிந்தை கொள்க!
மெலியாரை விலக்கிநின்று வேறு காணல்
மிகக்கொடிதே! மேதினியில் பகுத்துப் பார்த்தால்,
பலம்கொண்ட யானையது மூர்க்கம் கொண்டு
பாகனையே பழிதீர்க்கும் கதைகள் உண்டு!
நலம்பேணும் வீட்டிலுளோர் விரட்டிக் கல்லால்
நாயதனை அடித்தாலும் நன்றி காட்டும்!

நல்வழியில் ஞானத்தில் திளைக்கா தோரை
நண்ணிடவே அஞ்சிடுவர் சான்று டையோர்!
வல்லபெரும் வாய்மைநிறை மாந்தர் தம்மை
வலிமையற்றோர் நாடுதலால் ஏற்றம் கொள்வர்!

புல்பூண்டு, புழுக்கள்சேர் அழுக்கு நீரும்
புவிநீக்கிச் சமுத்திரத்தில் கலக்கும் காலை
மெல்லெனவே தன்மையது வேறில் லாது
மீட்சியிலாக் கடல்நீராய் மாறிப் போகும்

குழுவிலிருப் போரெல்லாம் நல்லா ரென்றே
குற்றமில்லா நெஞ்சத்தோர் குலவிச் சேர்வர்!
பழுதில்லா உள்ளத்தோர் அவர்தாம் என்றே
பார்வையினால் முடிவெடுத்தல் நன்றே யன்று!
செழுமைமிகு தாமரையும் சேர்ந்து வாழும்,
சீர்குளத்து ஆம்பல்பூக் கூட்டம் தன்னில்
ஒழுக்கமிகு மானிடரின் உறவிருந் தாலும்
ஒப்புரவு இல்லாதார் உய்யார் அன்றோ?

பொருளுடையோர் சுற்றத்தா ரெனினும் அன்னார்
பொருந்தாதா ரெனக்கண்டால் நல்லோர் நண்ணார்!
பெருந்தகைமை படைத்தோராய்ப் புறத்தே வாழும்
பேராண்மை மாந்தரையே பெரியோர் சார்வார்!
அருகமைந்த அலைகடலில் அள்ளும் நீரை
அங்கிருக்கும் மாந்தருந் துவதே யில்லை!
துரவுகளைத் தொலைதூரம் தேடி நாடித்
தூய்மைநிறை நீரதனைச் சுவைத்தல் காண்பே!

நட்பென்றும் உறவென்றும் உரிமை கூறி
நயம்படவே உரைத்தெம்மை நண்ணி நிற்பர்
கட்புலனால் அறிந்திடாத கருமம் ஆற்றிக்
காலத்தில் தீங்கிழைக்கும் கபடம் செய்வர்
ஒட்டுண்ணிக் குருவிச்சை இனமும் கூட
ஒய்யார விருட்சங்கள் தம்மில் ஊன்றிப்

பட்டுவிடச் செய்துவிடும், படிப்படி யாகப்
        பாங்கான வளமெல்லாம் பருகுவ தாலே!

தன்னியல்பை யொத்தோரைத் தகுந்த நட்பாய்ச்
        சார்ந்திருத்தல் சான்றோர்க்குச் சால்பாம், நன்றே!
உன்னிப்பா யுணர்ந்திருந்து உறவைத் தேர்தல்
        உளமார்ந்த உயர்வதனைத் தருமே! அல்லால்,
கன்னத்தில் முத்தமிட்டுக் கையில் தாங்கிக்
        காத்திரமாய் வளர்த்தெடுத்த காட்டு மந்தி
பின்னிருந்து பிளிற்றிநின்று பாய்தல் போலும்,
        பேரிடரும் புரிந்திடுமே, பிணங்கு நட்பு!

பறவைகளில் விலங்குகளில் ஒட்டி வாழும்
        பாதகம்செய் உயிரினங்கள் அவற்றிற் தங்கி
உறிஞ்சிவிடும் குருதியெலாம்; உயிரும் நீங்க,
        உதறியுடல் விட்டகன்று கழன்று போகும்
செறிவுடனே உறவாடி வருவோர் தாமும்
        செல்வமின்றி வறுமையது வந்த காலை
உறவறுத்து விலகிடுவார், உலகிற் காண்பு
        உண்மைநிலை இதுவன்றோ? உணர்விற் கொள்வீர்!



# அன்போடு பண்போடு எம்மோடு வாழ்ந்தவர்!



**மாவிலி மைந்தன் சி. சண்முகராஜா**

திரையிலா அரங்கம்போல் திறந்தநல் மனத்தினார்
தில்லைசிவ குமர னென்பார் - குணத்
திறத்தினால் உறவை வென்றார்!
கரையிலாக் கல்வியின் கரைகாண விழைந்தவர்
காரைநக ரீன்ற புதல்வன் - பல
கலைகற்றுத் தேர்ந்த கலைஞன்!

நரைவிழுந் தாலென்ன நடைதளர்ந் தாலென்ன
நலம்காணப் புலமை பெற்றார் - தமிழ்
நயம்காணக் கவிதை கற்றார்!
தரைசாயும் நெல்லாகித் தகைசார்ந்த பண்போடு
தருக்கின்றிப் பணிந்து நின்றார் - அவர்
தமிழாலே உயர்ந்து நின்றார்!

வித்துவம் கண்டதுறை விஞ்ஞானம் பெற்றபணி
வேதியியல் ஆயும் அறிவே - எனில்
விரும்பியது தாயின் மொழியே!
பித்தாகி யாப்போடு பாமாலை பாடவே
பெருந்தூரம் கடந்து பயணம் - நலம்
தொலைந்தாலும் துணிந்த இதயம்!

தத்துவம் கலந்துவர முத்தான பாக்களைத்
தரமாக யாத்து வைத்தார் - செந்
தமிழாலே வார்த்து வைத்தார்
எத்தனை பண்போடு அன்போடு வாழ்ந்தனர்
ஏனவரைக் காலன் வென்றான் - இன்று
ஏனிந்தச் சோகம் தந்தான்!

# மறந்திடுமா மனது



இராஜ்மீரா இராசையா

இன்றமிழ் ஊற்றை எண்ணும் போதிலும்
பண்சேர் பதிகம் படிக்கும் போதும்
விண்ணுள பொருட்களை வியந்திடு வேளையும்
கண்முன் தோன்றிக் காட்சி தருவார்

மரபுக் கவிதை மட்டுமா புகட்டினார்
தரமொடு வாழ்வைத் தக்க வைத்திட
பரமனை வேண்டிப் பக்குவம் பெற்றிடச்
சிரமமில் வழிகளும் செப்பியே நின்றார்

தலைமுறை தலைமுறை தக்க தமிழைக்
கலைகள் கதைகள் கவிதைகள் ஊடும்
விலையிலாப் பேச்சிலும் வார்த்து உலகிதில்
நிலைபெறச் செய்ய நினைப்பீர் என்றார்

மலர்ந்த முகத்தொடு மகிழ்வு பொங்கப்
பலரை இணைத்துப் பகர்ந்த கருத்துகள்
மறக்க முடியுமா மனத்துள் என்றும்
சிறப்பைத் தரவே சிலிர்த்து நிற்குமே

அன்புப் பண்டிதர் அலெக்ஸ்சாந் தராசான்
என்றும் வாழ்வார் எந்தைபோல் என்னுள்
நன்றே மரபை நானும் பேணிட
நின்றுத வுதேயவர் நல்வழி காட்டலே!

# வானுயர ஓங்கும் வளம்



கந்த. ஸ்ரீபஞ்சநாதன்

அன்னை பிதாவான அன்பின் முதற்குரு
இன்புடன் கூறும் இனியசொற்கள்—என்றென்றும்
மானமுடன் கேட்டு மகிழ்ந்து சுவீகரித்தால்
வானுயர ஓங்கும் வளம்.

ஆசிரியர் எப்போதும் ஆர்வமாய்க் கல்வியினை
நேசமுடன் மாணவர்க்கு நன்றாக—மாசின்றி
தேனின் சுவையாய் தெளிவாய்ப் படிப்பித்தால்
வானுயர ஓங்கும் வளம்.

அறிஞர்கள் கூறும் அறிவுரைகள் கேட்டு
குறிப்பாக மெய்ப்பொருளைக் கண்டு—உறுதியுடன்
காணுகின்ற நல்ல கருத்தினைக் கடைப்பிடித்தால்
வானுயர ஓங்கும் வளம்.

இனஉணர்வு பெற்று இறுதிவரை நம்மோர்
மனத்தால் பகையின்றி காக்கை—இனம்போல
தானாக ஒன்றாகி தாங்களே சேர்வுற்றால்
வானுயர ஓங்கும் வளம்.

சாதிகள் என்கின்ற சாக்கடையை உட்புகுத்தி
நீதியை விட்டு நிலையுயர—பாதியில்
தானுயர வித்தட்ட தன்மையுள்ளம் நீங்கினால்
வானுயர ஓங்கும் வளம்.

உள்ளத்தால் ஒன்றி உணர்வால் பிரியாது
கள்ளமின்றிச் சேர்ந்து கலந்திடும்—நல்நட்பு
மோனைப் பொருளால் மலர்திட்ட அன்பினால்
வானுயர ஓங்கும் வளம்.

பஞ்சமும் பட்டினியும் பாதுகாக்க வீடில்லா
துஞ்சும் மனிதர் துயர்துடைக்க—நெஞ்சில்
தானுயர்ந்தால் போதுமென்ற தன்னலம் மாய்தவரால்
வானுயர ஓங்கும் வளம்.

இல்வாழ்வில் இன்புற இல்லாள் இனியவளாய்
எல்லோரும் பெற்றிட்டால் ஏற்றமுற—நல்லுலகில்
ஆன்றோர்கள் வாழ்த்தவே அன்புடன் வாழலாம்
வானுயர ஓங்கும் வளம்.

நன்மை புரிகின்ற நல்யரசி யல்வாதி
அன்றுமில்லை இன்றுமில்லை ஆதலால்—
இன்றையநாள் சான்றோன் இலங்கையை
சாணக்கி யம்செய்தால் வானுயர ஓங்கும் வளம்.

சர்வதேச நாட்டின் சபைகளே நீதியினால்
பல்வகைத் தொல்லையினை பாரினில்—எல்லைமீறி
ஊனுடற்க்கு செய்யும் உபத்திரம் நீங்கினால்
வானுயர ஓங்கும் வளம்.




Royal
KITCHEN
DESIGN &
INSTALL
Custom Kitchen
Bath Vanites & Bars
Counter Tops
(Granite, Marble & Laminate)
Custom Closets
Wall Units
Refacing Kitchen
For free estimates
Tharma Tharmalingam
Tel: 905.264.0090
Cell: 416.728.6510
www.royalkitchen.ca
120 Whitmore Road, Unit 3 & 4

# யார் இந்த மாவீரர்?



**முருகேசு மயில்வாகனன்**

இனவாதம் மேலோங்க ஈழப்போ ராட்டம்
மனமொழி மெய்களால் மீண்டும் - இனவழிப்பே
கல்வியிலே சிங்களத்தார் கைவைக்க காளையர்கள்
தொல்லை கொடுத்தனரே தேர்.

கரந்திருந்த போராட்டம் காலத்தின் மாற்றம்
வரமாகப் பெற்றனரே வாய்ப்பை - தரமான
போரைத் தவறின்றிப் போற்றும் வகையிலே
சீராகச் செய்த சிறப்பு.

நெஞ்சேற வந்தகுண்டை நேரெதிர் கொண்டதனை
வஞ்சனையர் கண்டஞ்சி வாடியே - தஞ்சமென
ஓடி ஒழித்தனரே ஏக்கமுடன், எம்மவர்கள்
நாடினரே வெற்றிபல நன்கு.

கடற்புலிகள் சாகசங்கள் கண்ணைக் கவரும்
கடமையின் காவலர்கள் காலம் - இடமளிக்கா
விட்டாலும் தாமுணர்ந்தே வீரச் செயல்களை
திட்டமிட்டுச் செய்த சிறப்பு.

வான்படை யோடு தரைப்படையும் வானுயர
ஊனமின்றிப் போரில் உயர்ந்தனரே - தேனினிய
தாய்நாட்டைக் காக்கத்தான் தக்க 'பொலிஸ்'படையும்
கைவரப் பெற்றனரே காண்.

மாண்டாலும் கொள்கையில் மாற்றமிலா மாவீரர்
ஆண்டதோர் காலமுண்டே அக்காலம் - மீண்டுவர
பாரெங்கும் செந்தமிழர் பக்குவமாய் வாழ்நாட்டின்
கூரறிவால் கூர்க்கும் சிறப்பு.

வெற்றிக்கு வித்திட்ட வேங்கைகளின் வீரவாழ்வு
இற்றைவரை ஓங்கி ஒளிர்கின்ற - நற்பெயரை
சிற்றறிவு கொண்டோர் சிதைக்கத் துணிந்தார்கள்
பற்றுள்ளோர் பார்த்திருக்கார் பார்.

வெண்ணை திரண்டுவர வேற்றாரின் ஆதரவால்
மண்மீட்கச் சென்றவரை மாற்றாரின் - குண்டுகளால்
கொன்றொழித்த சிங்களமே கொள்கை வகுப்பாரின்
பொன்மொழியின் கோட்பாடோ சொல்.

சூழ்ச்சியால் வென்றவரை சூழ்ந்ததே பாவமின்று
வாழ்க்கையில் இன்பதுன்பம் வாய்ப்பாக - சூழ்ந்துநிற்கும்
எந்நேரம் ஏதென்றறி யாத மகிந்தர்க்கு
வந்தவினை நன்கறிய வாய்ப்பு.

மாண்டாலும் மாழாத மாவீரர் மாசற்ற
காண்டற் கரியநற் காளையர்கள் - தீண்டாமை
என்னும் அரக்கனை ஏற்கா தொழித்தனரே
இன்னலையும் ஏற்றார் எதிர்த்து.

நடுகற்கள் என்றுமே நாட்டுக்குச் சொல்லும்
வடுவாம் செயல்களின் வாய்ப்பை - நடுநின்று
ஆராய்ந் தறிந்துமே ஆவனசெய் ஆள்வோரின்
சீராம் கடமைச் சிறப்பு.

# மாசிலா மாணிக்கம் பண்டிதர் ம.செ. அலெக்ஸ்சாந்தர்



முஹமத் ஹன்ஸீர்

அன்பும் பண்பும் அறிவொடு ஆற்றலும்
ஒன்றாய் அமைந்த உத்தம நன்மகன்
என்றும் சிரித்த எழிலாம் வதனனே
நின்று நிலைத்தீர் நிறைவொடு நீரே!

அளப்பெரும் யாப்பினை அழகாய் எளிதாய்
விளக்கமாய் விளக்கியே விரும்பிக் கற்றிட
பண்டிதர் அலெக்ஸ்சாந் தரைப்போ லொருவரை
கண்ணளால் கண்டிடக் கிடைக்குமோ இனிமேல்?

புன்சிரிப் புள்ளே புதுமைகள் புகுத்தி
நன்மனத் தாலே நன்மையில் நடந்து
தன்மனப் போக்கில் தனக்கெனும் பாணியில்
நன்மையே செய்து நன்றாய் வாழ்ந்தவர்!

தமிழே அமுதே உயிரென் பார்கள்
அழகே அதுவே இனியென் பார்கள்
குமிழக் கவிதை குவிந்திட லாக்கி
இன்றும் இனித்திட இயன்றதைச் செய்தவர்

உலகத் தமிழர் பண்பாட் டியக்கம்
உலக ளாவிய மகாநா டொன்றினை


நலமாய்க் கனடா நாட்டில் நடத்திடப்
பரிசாய்க் கிடைத்தது இவரது நட்பு!

என்கவி தைகளை எழுத்தில் கண்டதும்
என்னுடன் ஏற்ற தொடர்புகள் கொண்டவர்
நன்றாய் மரபுக் கவிதைகள் கற்றிட
வரும்படி அன்புக் கட்டளை யிட்டார்.

கற்றேன் கற்றேன் கசடறக் கற்றேன்
பெற்றேன் பெற்றேன் யாப்பினைப் பெற்றேன்
பற்றோ டிணைந்தே பைந்தமிழ் கவியொடு
மற்றவை யாவுமே மகிழ்வொடு கற்றேன்

யார்வரா விடினும் தான்வரு வேனெனக்
கவிதை வகுப்பினில் கட்டுப் பாடுகள்
பாரினி லிவர்போல் பாசமாய் ஊட்டிட
யாருளார் உந்தன் பேர்புகழ் நிலைக்கவே!

பாவமே செய்திடாப் பசுமை மனத்தினன்
யாவரும் அறிந்த தூய்மையாம் ஆத்மா
தேவனின் திருவடி தீதின்றி நிலைத்திட
பாவகை பாடினோம் பண்டிதா சாந்தியே!



# சேயின் சிரிப்பு




அச்சுவேலியூர் கு. கணேசன்

## இன்னிசை வெண்பா

தாயின் மடியிலே தங்கச் சிலைவந்து
ஆய கலைகளை அள்ளிச் சொரிந்திடும்
வேயின் குழலிசை வேணுகானம் சிந்திடும்
சேயின் சிரிப்பே சிரிப்பு!

## வெளிவிருத்தம்

சேயெனும் செல்வம் சிந்துதே புன்னகை - அது
பாயினிற் கிடந்தே பாத்திடும் தேவதை
கோயிலின் வாசலிற் குவிந்திடும் அடியவர் - சேயின்
வாயினிற் சிந்திடும் வார்த்தைகள் வேதங்களே!

ஆயிரம் ஆயிரம் அரும்பொருள் இருந்தென்ன - அன்புச்
சேயினைப் போற்பெரும் செல்வம் உண்டாமோ
கோயிலின் கோபுரம் கொடிமலற் புன்னகை - பெற்ற
தாயின் மடியிலே தவழ்ந்திடும் தழிற்கொடியே!

அம்பிகை வரமோ ஆதியிற் தவமோ - இறை
நம்பிக்கை வைத்தே நாம்பெற்ற மகவோ
தும்பிக்கை எமக்குத் தந்தநற் சுதனோ - இங்கு
எம்குலம் ஓங்க இறைதந்த பலமோ!

மழலையின் புன்னகை மன்மதன் மென்னகை-இனிய
பழமுதிர் சோலையிற் பனித்திடும் தேன்வதை
குழலென்பர் யாழென்பர் குழந்தையின் குரல்கேளார்-அது
அழஅழக் காதினில் ஆனந்த கீதமே!

கவிதையின் முதல்வரி குழந்தையின் சிரிப்பொலி-அது
செவிகளிற் சிந்தியே சிந்தையிற் கலந்திடும்
புவிதனிற் பூத்திடும் புதுப்புது ராகங்கள் - அதில்
குவிந்திடும் தெய்வீகம் குழந்தையின் சிரிப்பழகே!

காரிருள் போக்கக் கடவுளைத் கைதொழுதோம்-எங்கள்
வேரினைக் காக்க வந்தநல் விழுதே
ஊரினில் உவந்து உத்தமர் பாராட்ட - இந்தப்
பாரினில் ஆதாரம் பிள்ளைகள் தானே!

தங்கரதம் போலவே தங்களை நாம்வளத்தோம்-வானில்
பொங்கிவரும் பூரணையில் பூமுகத்தைப் பாத்தோம்
சங்கீதம் சொரிகின்ற சிங்காரச் சிரிப்பினிலே-அன்புத்
தங்கத்தாய் அரவணைப்பில் தந்தஇன்பம் கோடியடா!

அங்கென்றும் இங்கென்றும் அனாதை இல்லங்களில்-வெம்பி
வெங்கொடுமைச் சாக்காட்டில் வேதனையால் வாடுகிறோம்
தங்நிலா வானில்வர தங்களையே காணுகிறோம்-பால்
தந்தமுலை நொந்ததடா தந்தைமனம் வெந்ததடா

அன்றுதொட்டு அன்பகலா ஆசைமுகம் மறந்துபோச்சு-பசுக்
கன்றுவந்து கறவைதனைக் கடசிவரை மறப்பதில்லை!
உண்டுடுக்க உதவிசெய்த உத்தமற்கேன் இவ்வவலம்-வாழை
தண்டதனை காப்பாற்றும் தான்அழிந்தும் குலம்காற்கும்.

# தக்கவன் விதைத்த கவிதைகள்



கனி விமலநாதன்

எழிலுருக் கொண்டவென் ஏற்ற குருவே
பழிதொரு சொல்லும் பகரா - வழிதனில்
ஏற்றமொடு ஏகிடும் கூர்மதியை எந்தனுக்கும்
நாற்றென நட்டனையே நன்று.

என்நிலை காட்டிட ஏறிய மன்றெலாம்
பொன்மொழி கூறியெனைப் பாரினில் - இன்னவன்
என்பதை ஏற்றிடச் செய்தவை எல்லாமும்
என்மன மெல்லா மிருக்கு.

அன்புமொழி பேசி அரவணைத் தன்பொடு
அன்னையர்க் கொப்பாய் அவனியில் - இன்மொழி
தான்தந்த தக்கவர் காட்டிய சொல்வழி
மாண்பொடு வாழ்ந்திடு வம்.

மந்திரச் சொல்லால் மதியுடை மாந்தராய்
தந்தைவழி சென்றிடத் தந்திடும் - விந்தையிலும்
விந்தையிது தக்கன் விதைத்த கவிதைகள்
பந்திற் பரவின பார்.

# அமரர் பண்டிதர் ம.செ.அலெக்ஸ்சாந்தர் பற்றிய முன்பதிவுகளிலிருந்து ....

“நிலமற்ற, கல்வியற்ற சமூக மக்களின் பிரதிநிதியாக பல அரிய பெரும் சேவைகளை செய்துள்ளார். சிறுபான்மை தமிழ் மக்களை கல்வியில் ஈடுபட வைத்து, அவர்களது கல்வி அறிவினை வளர்த்ததோடு மாத்திரம் நின்று விடாது தொழில் வாய்ப்பினை பெறவும் உதவி வந்தார். தனக்கு கிடைத்த பதவிகளில் மிக நேர்மையுடன் செயலாற்றி உயர்ந்து நின்ற திரு.எம். எஸ். அலெக்சாந்தர் 1993ம் ஆண்டு கனடாவுக்கு புலம் பெயர்ந்து வந்தார். இங்கேயும் அவரது கல்வித் தேடலும், சமூகப் பற்றும் குறையவே இல்லை. இங்கே கல்வி கற்பிப் பதற்கான சான்றிதழைப் பெற்று ஆசிரியப் பணியினைப் பெற முனைந்தார். முதலில் கல்லூரியில் தொண்டர் ஆசிரியராகப் பணிபுரிந்து பின்பு கத்தோலிக்க கல்விச் சபை, ரொறண்டோ கல்விச் சபை, பீல் கல்விச் சபை ஆகியவற்றின் மூலம் பணிபுரிந்தார். அப்போது தமிழ் பிள்ளைகளுக்கான மொழி கற்பிக்கும் பணியில் பெரும் பங்காற்றினார். அத்துடன் கல்விச் சேவைக்கு பெரும் தொண்டாற்றி வந்த அதிபர் கனகசபாபதியின் இணை பிரியா நண்பரானார். இதன் மூலம் இருவரும் ஒன்றிணைந்து பல மொழி சார்ந்த வகுப்புகளை ஒழுங்கு செய்தனர். திரு.அலெக்சாந்தா தமிழ் கலைக் கல்லூரியில் இணைந்து தமிழ் மொழி பகுதியின் பொறுப்பாளராக 1995 முதல் 2003 வரை எட்டு ஆண்டுகள் பணியாற்றினார். அக்கல்லூரிக்கான கீதத்தினையும் இவரே எழுதியமை குறிப்பிடத்தக்கதாகும். தமிழ் மொழி கல்வித் திட்டம்,

தமிழ் ஆசிரியர் கருத்தரங்குகள் என்பவற்றில் சிறந்த பங்களிப்பினை செய்துள்ளார்.

தமிழ்மொழி சம்பந்தமான பல கண்காட்சிகளும் இவரால் ஒழுங்கமைக்கப்பட்டன. இலக்கண முறைகள், வெண்பா இயற்றும் முறை ஆகியவற்றில் இவரது ஒத்துழைப்பு கணிசமான அளவு இருந்தமை குறிப்பிடத் தக்கதாகும். திரு.அலெக்சாந்தர் 2002ம் ஆண்டு பெப்ருவரி 27ம் திகதி இருதய நோய்க்கு சத்திர சிகிச்சை பெற வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. அது வரையில் அவர் பொதுப் பணிகளில் உன்னதமாக ஈடுபட்டு வந்தமை குறிப்பிடத்தக்கதாகும். தமிழ் கலை தொழில் நுட்பக் கல்லூரி அமெரிக்காவில் நடத்திய மொழி வகுப்புக்களை நியூயோர்க், சிக்காக்கோ நகரங்களில் நடத்தினார். அத்துடன் மொன்றியல் நகரிலும் தமிழ் ஆசிரியர்களுக்கான கருத்தரங்குகளையும் நடத்தி உள்ளார். தமிழ் கலைக் கல்லூரியும், மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக் கழகமும் இணைந்து நடத்திய பி.ஏ. வகுப்பில் இலக்கண யாப்பு, அணி இலக்கண பகுதிகள் பற்றி கற்பித்து பல கவிஞர்களை உருவாக்கினார். இரண்டாயிரம் ஆண்டில் ஒரு சந்ததியின் ஆற்றலையும்,அறிவையும் மறு சந்ததிக்கு கையளிப்பதில் முன்நின்று உழைத்தவர் திரு.அலெக்சாந்தர் என்றால் அது மிகையாகாது. எழுத்து துறையிலும் இவர் கை தேர்ந்தவர். “Youth” என்ற ஆங்கில சஞ்சிகையில் கட்டுரைகளை ஆங்கிலத்தில் எழுதி வந்தார். பல்வேறு தமிழ் மலர்களில் தொடர்ந்து கட்டுரைகளை எழுதி வந்தார். “அன்பு மக்களே” என்ற பத்திரிகையில் பல்வேறு பணிகளை ஆற்றியுள்ளார். அதன் பிரதம ஆசிரியராக ஏழு ஆண்டுகள் பணியாற்றினார். பல்வேறு

வானொலிகளிலும் அறிவியல் ரீதியான கருத்தரங்குகளை நிகழ்த்தி உள்ளார். பல்வேறு பட்டி மன்றங்களிலும் கலந்து சிறப்பித்தவர்.

பல தமிழ் கழகங்களில் பணியாற்றியதோடு பட்டி மன்றங்களிலும் கலந்துக் கொண்டு அறிவியல் சார்ந்த விடயங்களை எடுத்துரைத்துள்ளார். அத்துடன் பல தமிழ் சங்கங்களில் அங்கம் வகித்து எதுவித பிரதி பலனையும் எதிர்பாராது தன்னலமற்ற தொண்டினை மக்களுக்கு வழங்கிய மகா புருஷர் இவர் என்பது மிகையாகாது. கனடாவில் ஒன்ராறியோ மாநகரில் வாழும் தமிழ் ஆர்வலர்களுக்காக 2007ம் ஆண்டு முதல் தமிழ் கவிதை வகுப்புகளை நடத்தி வந்தார். 2011ம் ஆண்டு முதல் கவிஞர் கழகத்தை ஆரம்பித்து பல கவிஞர்களை உருவாக்கிய பெருமை இவரையே சாரும்."

**- சிந்தனைப் பூக்கள் எஸ். பத்மநாதன்**

◆ ◆ ◆

"தமிழர் புலம்பெயர்ந்து வாழும் இக்கனடா நாட்டிலே நாம் எவ்வாறு வாழ வேண்டும் என்பதற்கு இலக்கணமாக வாழ்ந்து, தன் பெயர் நிறுவிச் சென்ற மாமனிதர் பண்டிதர் அலெக்கசாந்தர். அவர் மனத்தாலும் மற்றவருக்குத் தீங்கிழைக்காத பண்பாளர். நட்புக்கு உதாரணமாக வாழ்ந்தவர். நல்லாசிரியராகத் தளத்திலும் புலத்திலும் நற்பணிகள் ஆற்றிய நல்லாசிரியர். கனடாவில் தமிழ்க் கல்விக்குத் தன்னாலியன்ற பணிகள் அத்தனையையும் செய்தவர். 1990களில் முதன் முதலாக ரொறன்ரோ

மாவட்டப் பாடசாலைகளில் தமிழ் கற்ற மாணவர்களுக்கு முதன்முதலாகத் தமிழ்ப் பாடப் பயிற்சி நூல்கள் எழுதிய குழுவில் எங்களுடன் அலெக்சாந்தர் அவர்களும் இடம்பெற்றிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். எம்மவர் மத்தியல் கல்வி உளவியல் துறையில் மிக்க அறிவும் அனுபவமும் பெற்றிருந்த அலெக்சாந்தர் அவர்கள் அத்துறை சார்ந்து பல ஆய்வுக்கட்டுரைகளள, இங்குவெளிவந்த ஆய்வு மலர்களில் வெளியிட்டு வந்துள்ளாார். இத்தகைய கட்டுரைகள் அனைத்தும் தேடித் தொகுக்கப்பட்டுத் தனி நூலாக வெளியிடத் தகுதி பெற்றவை.

கவிதை வகுப்புகளை நடத்தி வந்தார். 2011ம் ஆண்டு முதல் கனடாத் தமிழ்க் கவிஞர் கழகத்தை ஆரம்பித்து பல கவிஞர்களை உருவாக்கிய பெருமை இவரையே சாரும்."

- **பேராசிரியர் பாலசுந்தரம் இளையதம்பி**,
தமிழ்த்துறைத் தலைவர், அண்ணாமலை கனடா வளாகம்.

◆ ◆ ◆

"பண்டிதர் அலெக்ஸாந்தர் அவர்கள் இறை பக்தியும், உயர்ந்த பண்பும், ஆழ்ந்த தமிழ் அறிவும், மனித நேயமும், தன்நலமற்ற சேவையுங் கொண்ட அற்புதமான ஒரு பெருமகனாவார்."

- **கலாநிதி.எஸ் சிவநாயகமூர்த்தி**,
முன்னாள் பிரதிக் கல்விப் பணிப்பாளர்

◆ ◆ ◆

“திறமைகள் யாரிடம் இருந்தாலும் போற்றவும் பாராட்டவும் தயங்காத பெருந்தகை. சமூக வளர்ச்சியே எப்போதும் அவர் சிந்தனையில் இருக்கும். தொடர்ந்து கற்றலும், தேடலும் அவரின் வாழ்நாள் இறுதிவரையிருந்தன.”

- **சு.இராசரத்தினம்**, தலைவர், கனடாத் தமிழ்ச்சங்கம்

◆ ◆ ◆

“புலம்பெயர்ந்த கனேடிய தேசத்தில் தமிழ்க் கல்விக்கு அவர் ஆற்றிய தொண்டு பலரும் அறிந்ததே. எப்போதும் தன்னை ஒரு மாணவ நிலையில் வைத்துக் கொண்டு கற்றுக் கொண்டும் அதே வேளை இறுதிவரை கற்பித்துக் கொண்டும் இருந்த ஆசான்.”

- **திவ்வியராஜன்**

◆ ◆ ◆

“He gave the gift of education not only to his own children, who are excelling in the path each has chosen, but also to others without expecting materialistic reward. Having begun his childhood from a humble background, Alexander master rose to a height, which is unimaginable to many in his situation.”

**- Manuel Jesudasn,** Barrister & Solicitor

◆ ◆ ◆

“Alexander master was a blessed soul
Who moved freely with young and old
Passing his wealth of knowledge and expertise”

**- Thuraiyuraan**

◆ ◆ ◆

“அமரர் அலெக்ஸாந்தர் அவர்கள் என்றும் பேராசைப் பட்டதில்லை. அவர்களின் காதல் திருமணத்தின் போது ஏற்பட்ட தடங்கல்கள் எல்லாவற்றையும் உடைத்தெறிந்து வாழ்ந்து காட்டியது மட்டுமல்ல பேரப்பிள்ளைகளோடும் கொஞ்சி விளையாடியவர். தனது கொள்கைகளை விட்டு விலகாது இறுதிவரை கடைப்பிடித்தவர்.”

**- குரு அரவிந்தன்**

◆ ◆ ◆

“அவர் பற்றி எண்ணும்போதெல்லாம் வாயெல்லாம் பல்லாகச் சிரிக்கும் அந்தக் குழந்தை முகமும், கலகலவென்ற குரலில் ஓய்யாது ஒலிக்கும் அவரது பேச்சும் என் மனத்திரையில் படமாய் ஓடும்! அழகிய மொழியினாலமைந்த அவரது பேச்சுத் திறன்தான் எண்ணிறந்த நண்பர்களையும் மாணாக்கர்களையும் அன்பர்கள் - அபிமானிகளையும் அவருக்குத் தேடிக் கொடுத்த பெருங்கொடை. நல்லன கண்டவிடத்து மனம் திறந்து பாராட்டுவதற்கும், நல்லனவல்லாதன கண்டவிடத்து நக்கீரனாய்த் தலை நிமிர்ந்து நின்று கண்டிப்பதற்கும் அந்த அழகிய மொழியினாலமைந்தது பேச்சு வல்லமையையே கருவியாகக் கையாண்டு வெற்றி கண்டவர். சிறந்ததோர் ஆசானாக இருந்து ஏராளமான ஆசிரியர்களையும், கல்வியாளர்களையும், கவிஞர்களையும், கலைஞர்களையும், நல்ல நல்ல மனிதர்களையும் அவர் ஆக்கி அளித்துள்ளமைக்கும் அதுவே முழுமுதற் காரணம்.”

**- க. நவம்**

◆ ◆ ◆

“முறுவல் பூர்த்த வெண்மதி ஒத்த வதனமும் நிமிர்ந்த பார்வையும் நெஞ்சில் உரனும் கொண்டவர் அலெக்ஸ்சாந்தர் மாஸ்ரர். அவர் ஆதிக்கக் கொடுமைகளுக்கு எதிரான துணிவான குரலும் காண்டு வளரும் பிஞ்சுகளை முன்னேற்றுவதற்காக ஈழத்துக்கல்லூரிகளிலும் புலத்துடன் பெயர்ந்து கனடாவிலும் குரலை ஓங்க உயர்த்திய கண்ணியம் மிக்க கனவானாக வாழந்தவர். கவி கண்டார். கவிஞர் கூடக் கண்டார். கூட்டமாக்கிப் புலமை ஏற்றம் பெறக் கண்டார். சந்தம் கூடிய நட்புக் கண்டார். அதனால் சாந்தம் கண்டார். அவர் சமூகக் கொடுமைகளுக்கு எதிரான அமைப்புக்களுடன் இயங்கியவர். சமூகம் என்ற பெயரில் அடிமைத்தனம் கொள்வோரை நெற்றிக் கண்ணால் துணிந்து பொசுக்கியவர். ஆசிரியம் என்ற பேரறத்தினைப் பேணுவதையே நோக்காகக் கொண்டவர். செயலூக்கம் கொண்டவர்.”

**- முனைவர் பார்வதி கந்தசாமி**

◆ ◆ ◆

“1972-73 ஆம் ஆண்டுகளில் மட்டக்களப்பு ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் விரிவுரையாளராகப் பணியாற்றிய வேளை பெற்ற அனுபவங்களைப் பகிர்ந்து கொள்வார். அழைக்கின்ற வேளையெல்லாம் பேசுவார், வினாக்களுக்கு விரிவான விளக்கம் தருவார், தொலைபேசியிலேயே இலக்கண வகுப்பொன்றை நடத்தி விடுவார். நான் பல ஆசிரியர்களிடம் தமிழ் மொழியைக் கற்றபோதும், பண்டிதர் ஐயா போல் இலக்கணத்தை மிக எளிமையாக கற்பித்த ஆசிரியரைக் கண்டதில்லை.”

**- க. குமரகுரு**

◆ ◆ ◆

“இராமலிங்க வள்ளலார் மனிதனைத்தேடி அலைந்தார். நான் எங்கும் தேடாமல் கவிதை வகுப்பிலேயே மிக சுலபமாக மனிதனைக் கண்டுகொண்டேன். ம. செ. அலெக்ஸ்சாந்தரைக் கண்டுகொண்டேன். மனிதம் அவரில் மேலோங்கி இருந்தது.

ஏழைகளின் குரலாக, இல்லாதவர்களின் குரலாக, பேசமுடியாதவர்களின் குரலாக மரணப்படுக்கையிலும் பேசினார். அலெக்ஸ்சாந்தர் ஒரு மாமனிதன்.”

**- சொக்கல்லோ சண்முகம்**

◆ ◆ ◆

“பேரன்புப் பேராசான் பேருள்ளப் பேரமுதன்
தீரனாய்க் கல்வியில் தேன்தமிழ் - சூரனாய்
பண்டிதராய்ப் பண்பினில் பாலகன் ஆனீரே!
அண்டமே போற்றிடல் ஆகு.

இவ்வுலகில் எத்தனை மனிதர்களை அன்பால் வசப்படுத்தினீர்கள் என்று எண்ணிப் பார்க்கின்றேன். ஒரு ஆசிரியர் என்றால் எப்படி இருக்க வேண்டும் என்று வாழ்ந்து காட்டினீர்கள்.

இனிய இல்லற வாழ்க்கையை வாழ்வாங்கு வாழ்ந்து காட்டிச் சென்றீர்கள். மாணவர்களை நண்பர்களாகப் பார்த்தீர்கள். உங்களை நானறியாத பருவத்தில் சமூகப் புரட்சியெல்லாம் செய்திருக்கிறீர்கள். நானறிய எல்லா மதங்களையும் அரவணைத்து வாழ்ந்தீர்கள்.”

**- அகணி சுரேஸ்**

◆ ◆ ◆

“ஆசிரியராய், அதிபராய், விரிவுரையாளராய், உதவிக் கல்விப்பணிப்பாளராய், கவிஞராய், சமூக சேவையாளராய் நம் மத்தியில் வாழ்ந்து நினைவால் எம் நெஞ்சங்களிலெல்லாம் நிறைந்து வாழும் பெருமதிப்பிற்குரிய அமரர் மனுவேற்பிள்ளை செல்வராசா அலெக்சாந்தர் அவர்கள்,

நல்ல நாற்றைக் கவிவயலில்
நாட்டிச் சென்ற குருவான
செல்வ ராசா அலெக்சாந்தர்
செய்த சேவை தனைப்போற்ற
இல்லை வார்த்தை என்பதனால்
இரண்டு கண்களும் பனித்திடநாம்
எல்லாம் வல்ல யேசுவிடம்
இரட்சிப் பீரென வேண்டுகிறோம்! ”

- **திரு.திருமதி. அருள்சுப்பிரமணியம்**, “தமிழ்ப்பூங்கா”

◆ ◆ ◆

“இருமொழிப் புலமை பெற்ற மிகச் சிறிய எண்ணிக்கையானவர்களில் அலெக்ஸ் முதன்மையானவர். தமிழிலும் ஆங்கிலத்திலும் பேச்சிலும் எழுத்திலும் இவரை விஞ்சி எம் சமுதாயத்தில் ஒருவருமே இல்லை எனலாம். வாக்கிலும் எழுத்திலும் இவரின் நாவிலும் கையிலும் கலைமகள் நடனமாடினாள். கலைக்கு எது மொழி? தாய்த் தமிழில் மட்டுமல்ல; ஆங்கிலத்திலும் அந்த மொழியைத் தாய்மொழியாகக் கொண்டவர்களுக்கு மேலாக அலெக்ஸ் அவர்கள் புலமை பெற்றிருந்தார்.”

- **ஆ. ராமநாதன் (ஆனி)**, அவுஸ்திரேலியா

◆ ◆ ◆

“கனடாவிற்கு புலம்பெயர்ந்த அவரை இனங்கண்டு கொண்ட தமிழ்க்கல்விப் பகுதியினர் அவரை நன்கு பயன்படுத்திக் கொண்டனர். ரொறன்ரோ கத்தோலிக்கக் கல்விச் சபையில் பணியாற்றியதோடு தமிழ் கற்பதற்கான பாடநூல்களை ஆக்கியும், பாடத்திட்டத்தை வகுத்தும் தந்தவர். பீல் பிரதேசக் கல்விச் சபையில் தமிழ் ஆசிரியராகக் கடமையாற்றியதோடு, ரொறன்ரோ கல்விச் சபையிலும் உயர் வகுப்புக்கான தமிழ்ப் பாடத்திட்டத்தை வகுப்பதிலும், பாடப்பயிற்சி நூல்களை ஆக்குவதிலும் அதிபர் கனகசபாபதியோடு இணைந்து செயற்பட்டவர்களில் மிக முக்கியமானவர் எனலாம்.

தமிழை எவ்விதம் கற்பிக்க வேண்டும் என்னும் கற்பித்தல் முறையினை தமிழ் ஆசிரியர்களுக்கு பயிற்சிப் பட்டறைகள் மூலம் பயிற்றுவித்து பல ஆசிரியர்கள் தரமானவர்களாக தங்களை ஆக்கிக்கொள்ள உதவிய ஒரு கல்வியியலாளர் எனலாம். அறிவகம், தமிழ் தொழில் நுட்பக் கல்லூரி போன்றன அவரின் பணியினைப் பெற்றுக்கொண்டவை என்பது குறிப்பிடத்தக்கது.”

- **த.சிவபாலு**

◆ ◆ ◆

“இலக்கணம் இலக்கியம் தமிழின் இருவிழி
பலமுறை பண்டிதர் பேசக் கேட்போம்
பலவித அறிவைப் பெற்று அவற்றைப்
பலருடன் பகிர்வதில் பரவசம் அடைவார்
இலக்கண அறிவில் இணையிலா நிபுணரே.
இன்சொல் அன்றி இவர்வாய் என்றும்
வன்சொல் பேசாதே வந்து படிப்போர்

நன்கு அறியும் வரையும் பாடம்
பன்முறை சொல்லிக் கொடுக்கும் எங்கள்
பண்டிதரை இனிமேல் பார்ப்பது எப்போ?"

**- அமரர் கலாநிதி தில்லைநாதன் சிவகுமாரன்**

◆ ◆ ◆






# கலாநிதி சிவகுமார் அவர்களின் கலாநிதிப் பட்டம் பெற்ற ஐம்பதாவது ஆண்டு நிறைவையொட்டி ...




ஈழத்துக் காரைநகர் ஈன்ற சிவகுமார்
வாழவந்த இக்கனடா வாய்ப்பளிக்க - வாழ்வுக்காய்
நல்லதோர் கல்வியை நாடினார் பல்கலை
வல்ல கழகமதில் வாய்ப்பு.

விஞ்ஞான பாடங்கள் வேட்பாகக் கற்றதனால்
தஞ்சம் கொடுக்கவே தக்ககல்வி - துஞ்சலின்றிப்
பேரா சிரியராய்ப் பெற்றார் பதவிகள்
வேரானார் மாணவரின் வேட்பு.

ஆண்டுபல கற்பித்தார் ஆனந்தம் மேலோங்க
மாண்டநல் மாணவர்கள் மாட்சிபெற - ஆண்டவனின்
பேரருளும் ஆட்கொள்ளப் பெற்றார் பெரும்பேறு
கூரறிவு கொண்டதந்தக் கோ.

பண்பில் உயர்ந்தவர் பாசம் நிறைந்தவர்
வண்டமிழில் வல்லவர் வாய்மைசேர் - கண்ணியம்
காக்கும் கருணையர் காலமெலாம் பாவெழுதும்
தாக்கமவர்க் கென்றுமே தான்.

சிந்தனைச் செல்வன் சிவகுமார் செப்புகின்ற
விந்தைசேர் நற்கவிகள் வித்தகர்கள் - சிந்தைபுக

ஆய்வுசெய்யும் அற்புத ஆற்றலுள்ளோர் செந்தமிழார்
தேய்வறியாப் பாவலரே தான்.

சேர்ந்தார் கவிகற்கச் செந்தமிழில் வல்லவர்கள்
ஆர்வமுடைக் கந்தவனம் ஆற்றலுள - போர்வாள்
அலெக்செனும் ஆசான் அருமைப் பெரியார்
கலக்குகின்ற காரிகையில் காண்.

நல்லதோர் தந்தையிவர் நாயகிக்கு நாயகனார்
கல்வியிலும் மேம்பாடு காதலிலும் - வல்லவரே
ஆசைக்கோர் ஆண்பிள்ளை அன்புக்கோர் பெண்ணுமென
நேசமாய்க் கொண்ட நெறி.






# பவளவிழாக் காணுகின்ற சிந்தனைப்பூக்கள் பத்மநாதன் ஆசிரியர் அவர்களுக்கு புகழ் மாலை




## கும்மி

சிந்தனைப் பூக்களின் சீரிய பேச்சினால்
சித்தம் குளிருதே தோழர்களே!
வந்தவர் மேடையில் ஏறிநின்றால் எங்கள்
வளமாம் நயாகரா தோற்குமன்றோ! 1

எத்துணைக் கல்விகள் கற்றவரோ பத்மர்
ஏறிய மேடைக ளெத்தனையோ
சித்தரைப் போலொரு சிந்தனை யாளனை
சீவியத்தி லெங்கும் கண்டிலனே! 2

நாலடி ரெண்டடி நானாதி கற்றவர்
நற்பெரும் காப்பியம் நன்கறிவார்
சீலனிவ ரெம்முன் சிந்திடும் சேதிகள்
செவியொடு வாழ்விற்கு மின்பமன்றோ! 3

ஆசிரிய ராக இவரிருந்தே நாட்டில்
ஆற்றிய சேவைகள் எத்தனையோ!
பேசற் கரியநற் பள்ளி யதிபராய்
பேணிய சேவையு மெத்தனையோ! 4

அறிவது ஆழக் கடலையா அஃது
அடங்குதே சிறியகபா லத்துளே!
செறிவான பேச்சும் சிறுகதையும் சீலன்
செதுக்கிடும் கட்டுரை ஆயிரமே! 5

கண்டதும் கட்டி அணைத்திடுவார் நல்ல
கனிமுகங் காட்டிக் குழைந்திடுவார்
பண்டைய நூல்கள் பற்றபல கற்றநற்
பண்டிதன் எங்கள் பத்மநாதன் 6

பவளத்தை இன்றிவர் கண்டாலும் பத்மர்
பழக்கத்தில் சின்னக் குழந்தையப்பா
தவளுவதோ நாவில் தனித்தமிழே அ∴து
தடையேது மில்லாச் சமுத்திரமே! 7

தங்கத் தமிழொடு தாராள ஆங்கிலம்
சிங்கனிவர் வாயில் செழுமையப்பா!
எங்க ளறிவினை ஏற்றிடவே நித்தம்
எழுகின்ற செய்திக ளெத்தனையோ? 8

பொங்கு தமிழரின் பெட்டகமே பத்மர்
போகு மிடமெல்லாம் சிந்தனையே!
சங்குத் தலையினுள் சங்கதி பற்பல
தங்கிக் கிடப்பது மற்புதமே! 9

நூறைக் கடந்திவர் நோய்நொடி யின்றியே
நூல்கள் பலவும் படைத்திடணும்
ஆறாகப் பாயட்டும் அந்நாளு மவர்பேச்சு
ஆராதித் தேன்வர சித்தியானே! 10




கனடாத் தமிழ்க் கவிஞர் கழகம்